**செய்தி வெளியீடு எண்: 007** **நாள்: 02.01.2019**

**<u>கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை</u>**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

தமிழ்நாட்டில் செயல்படும் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பண்ணைச்சாராக்கடன் பெற்று, தவணை பாக்கி வைத்துள்ள கடன்தாரர்கள் பயன்பெறும் வகையில் ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம் 17.12.2014 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 30.09.2017 வரை 2950 கடன்தாரர்கள் ரூ.63.50 கோடி கடனைச் செலுத்தி ரூ.61.81 கோடியை கூடுதல் வட்டி, அபராத வட்டி மற்றும் இதர இனங்களில் தள்ளுபடி பெற்றுள்ளனர். தற்போது, பண்ணைசாராக் கடன்தாரர்கள், மீண்டும் இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலித்து, அனைவரும் முழுமையாகப் பயன்பெறும் வகையில் கடனைத் திரும்பச் செலுத்த மீண்டும் வாய்ப்பு அளிக்கும் பொருட்டு 31.12.2018 முதல் 31.12.2019 வரை, ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தை நீட்டித்து அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, இத்திட்டத்தின் கீழ் 25 சதவிகித கடன் தொகையினை மட்டும் செலுத்தி, மீதமுள்ள 75 சதவிகிதத் தொகையினைச் செலுத்தாத 565 பயனாளிகள் மற்றும் இதுவரை இத்திட்டத்தில் சேராத 1918 கடன்தாரர்கள், இத்திட்டத்தில் இணைந்து வட்டி, கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடிச் சலுகையினைப் பெறலாம்.

எனவே, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பண்ணைசாராக்கடன்கள் பெற்று நீண்ட காலமாக நிலுவையிலுள்ள கடன்தாரர்களின் நலன் கருதி, தற்போது கால நீட்டிப்பு செய்து அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தில் சேர்ந்து தவணை தவறிய பண்ணைசாராக் கடன்தாரர்கள் பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசு முதன்மைச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**